THE HINDU dt 23/03/17.

# Water bottles seized

SPECIAL CORRESPONDENT
CHENNAI

A team from the Bureau of Indian Standards seized packaged drinking water from two units in Kancheepuram district for misuse of the ISI mark. Water bottles of 500 ml with the brand name 'SS Aqua' were seized from a unit in Thimasamuthiram, as they had the mark without a licence number. Similarly, 20-litre bubbletops with the brand name 'Doctor' were seized from a unit of JPR Products in Melkathirpur.

தினமலர்
சென்னை | வியாழன் | 23.3.2017

# போலி ஐ.எஸ்.ஐ.: குடிநீர் நிறுவனங்களுக்கு சிக்கல்

சென்னை, மார்ச் 23– போலியான, ஐ.எஸ்.ஐ., முத்திரையை பயன்படுத்திய, இரண்டு குடிநீர் நிறுவனங்கள் மீது, இந்திய தர நிர்ணய ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், திம்மசமுத்திரம் மற்றும் விப்பேடு கிராமங்களில் உள்ள, இரண்டு குடிநீர் நிறுவனங்களில், இந்திய தர நிர்ணய ஆணைய அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர். அப்போது, போலியான, ஐ.எஸ்.ஐ., முத்திரை பயன்பாடு கண்டறியப்பட்டது.

இதையடுத்து, போலி முத்திரையிட்ட, 20 லிட்டர், அரை லிட்டர் குடிநீர் கேன்கள், போலி முத்திரை லேபிள்களும் பறிமுதல் செய்யப்பட்டன. இரு நிறுவனங்கள் மீதும், சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என, ஆணைய அதிகாரிகள் கூறினர்.

DINATHANTHI dt 23/03/17

றோம்' என்று கூறியுள்ளனர்.

## காஞ்சீபுரத்தில் அதிரடி ஆய்வு:

# குடிநீர் பாட்டில்களில் போலி ஐ.எஸ்.ஐ. முத்திரை அச்சடிப்பு

## அதிகாரிகள் நடத்திய சோதனையில் கண்டுபிடிப்பு

சென்னை, மார்ச்.23-

காஞ்சீபுரத்தின் சில இடங்களில் குடிநீர் பாட்டில்கள் மற்றும் கேன்களில் ஐ.எஸ்.ஐ. தர முத்திரை போலியாக அச்சிடப்படுவதாக இந்திய தர நிர்ணய அமைவனத்துக்கு புகார்கள் வந்தன.

இதையடுத்து சம்பந்தப்பட்ட இடங்களில் நேற்று அதிரடி ஆய்வு நடந்தது. இந்த ஆய்வில் காஞ்சீபுரம் மாவட்டம் திம்மசமுத்திரம் பகுதியில் உள்ள எஸ்.எஸ்.அக்குவா கம்பெனியில் தயாரிக்கப்படும் 500 மி.லி. குடிநீர் பாட்டில்களில் போலியாக ஐ.எஸ்.ஐ. முத்திரை அச்சிடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோல மெய்கதிர்பூர் வெப்பேடு கிராமத்தில் உள்ள ஜே.பி.ஆர்.புரொடக்ட்ஸ் எனும் கம்பெனியில் 20 லிட்டர் குடிநீர் கேன்களில் போலியாக ஐ.எஸ்.ஐ. முத்திரை அச்சிடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து 2 கம்பெனிகள் மற்றும் உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஐ.எஸ்.ஐ. முத்திரையை போலியாக அச்சிடுவது தெரியவந்தால் சம்பந்தப்பட்டவருக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் அல்லது ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

மேற்கண்ட தகவல் இந்திய தர நிர்ணய அமைவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது.